# தொன்மம்

தொன்மம் (MYTH) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது. கடவுளர்கள், தேவர்கள், மக்கள், விலங்குகள், ஆகிய பல்வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகள் தொன்மம் எனப்படுகிறது தொல்காப்பிய குறிப்பிடும் வனப் புகழுல் தொன்மை என்பது ஒன்றாகும்.

**தொன்மை (தொன்மம்) – தொல்காப்பியர் கூற்று**

‘‘தொன்மை தானே சொல்லுங் காலை

உரையோடு புணர்ந்த பழைமை மேற்றே’’

**– தொல் செய்யுளியல்**

**இளம் பூரணர் உரை**

தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருள் மேல் வருவன. அவை ராம சரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்.

**பேராசிரியர் உரை**

தொன்மை என்பது உரைவிரா அய்ப் பழைமையனவாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது. அவை பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை போல்வன.

**அகநானூறு**

‘‘வெல் வேல் கவுரியர் தொன்முதுகோடி

முழங்கிடும் பௌவம் இறங்கும் முன்றுறை

வெல்போர் இராமன் அருமறைக் கவித்த

பல்வீழ் ஆழம் போல

ஒலியவிந் தன்றிஙவ் வழுங்கள் ஊரே’’ – **கடுவன் மள்ளனார்**

**பொருள்**

பல விழுதுகளை உடைய பெரிய ஆலமரத்தடியில் நின்று ராமன் சீதையை மீட்பது குறித்து தன் உடனிருந்தோருடன் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அம்மரத்திலிருந்து பறவைகளின் ஒலி தொந்தரவாக இருப்பதால் ராமன் தன் கையை உயர்த்தி செய்கை செய்ததும் அவை அமைதியாயின. அது போன்று தலைவியை தலைவன் மனம் செய்து கொண்ட உடன் அலர் தூற்றிய ஊரார் அமைதி அடைந்தனர். இது தோழியின் கூற்று. காதலின் வெற்றியை உணர்த்த இத்தொன்மம் பயன்படுகிறது. சங்க இலக்கியங்களில் முருகனை அழகுக்கும் – ஆற்றலுக்கும் வீரத்துக்கும் உவமையாக்கிப் பல தொன்மங்கள் உள்ளன.

**நற்றிணை**

‘‘முருகு உறழ் முன்பொடு

கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை’’

**– கபிலர்.**

யானை சினங்கொண்டு பேராற்றலுடன் போர் செய்த சிறப்பினை, முருகனின் வீரத்தோடு இணைத்து கூறியுள்ளது இப்பாடல். முரண்பட்டவை ஒன்று சேர்ந்திருக்கிற சூழலை விளக்குவதற்கு தொன்மங்கள் பயன்படுகின்றன.

‘‘உன் மனம் ஒரு பாற்கடல்

அதைக் கடைந்தால்

அமுதம் மட்டுமல்ல

ஆளா காலமும் வெளிப்படும் என்பதை

நீ அறிவாய் அல்லவா ?’’ **–அப்துல் ரகுமான்**

இங்கு பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகியன தொன்மங்களாகும்.

‘‘மதுரை எரிக்கக் கண்ணகியாயும்

மீண்டும் எழுந்திடச் சீதையாயும்

எப்பவும் எரிதழல் மடி சுமப்பது இனி

எங்கள் வேலையல்ல’’

என்ற கவிதையில் பெண் பெண்ணியத்திற்கான தொன்மமாக கண்ணகியும் பெண்ணிய


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in
www.tnpscgroup4.in

போராட்டத்திற்கான தொன்மமாக மதுரையை எரித்த நிகழ்வும் விளக்கப்பட்டுள்ளன.

**இந்திய கிரேக்க தொன்மை ஒப்புமைகள்**

கிரேக்க தொன்மங்களுக்கும் இந்திய தொன்மங்களுக்கும் நிறைய ஒப்புமைகள் உள்ளன.

| | |
|---|---|
| 1. இந்திரன் | சீயஸ்பீடர் |
| 2. வருணன் | ஊரனாஸ் |
| 3. பலராமன் | டயானிசிஸ் |
| 4. கார்த்திகேயன் | மார்ஸ் |
| 5. சூரியன் | சோல் |
| 6. சந்திரன் | லூனஸ் |
| 7. விஸ்வகர்மன் | வன்கன் |
| 8. கணேசன் | ஜோனஸ் |
| 9. துர்க்கை | ஜீனோ |
| 10. சரஸ்வதி | மினர்வா |
| 11. காமன் | இராஸ் |

**அன்றாட பேச்சில் கலந்துள்ள தொன்மங்கள்:**

- ‘‘கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்’’
- ‘‘இந்தா போறான் சகுனி’’
- ‘‘இவன் பெரிய அரிச்சந்திரன்’’
- ‘‘கர்ணன் தோற்றான் போ’’

**பண்பு குறியீடுகளான தொன்மங்கள் :**

- அறத்திற்கு - தருமன்
- வலிமைக்கு - பீமன்
- நீதிக்கு - மனுநீதிச் சோழன்
- வள்ளல் - தன்மைக்கு கர்ணன்

**நவீன இலக்கியங்களில் தொன்மமாக பயன்பட்ட புராணங்கள் :**

- ராமாயணத்தின் அகலிகை கதையை வைத்து புதுமைப்பித்தன் சாப விமோசனம், அகிலிகை கதைகளை எழுதியுள்ளார்.
- திருவிளையாடற் புராணத்து சிவன், நக்கீரனை கொண்டு அழகிரிசாமி **‘‘விட்ட குறை’’ ‘‘வெண்தலால் வேகாது’’** என்னும் சிறுகதைகளை படைத்துள்ளார்.
- துன்பங்களைக் கொண்டு ஜெயமோகன் **(பத்ம வியூகம்),** எஸ். ராமகிருஷ்ணன், **(அரவாணன்)** முதலியோர் புதினங்களைப் படைத்துள்ளனர்.

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in